தெரிய வருகிறது. சில நேரங்களிலே வன விலங்குகள் கோடைக் காலங்களிலே வெளியே வருகின்றன. ஆனால், அவற்றிற்குத் தேவையான தண்ணீரை நாங்கள் தொட்டிகள் கட்டி நிரப்பி, கொடுக்கிறோம். தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம், தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், இங்கே கசிவுநீர்க் குட்டைகளும், தடுப்பணைகளும் கட்டப்பட்டு, மழைக் காலங்களில் வருகின்ற அந்தத் தண்ணீரெல்லாம் அங்கே தேக்கி வைக்கப்படுகின்றது. சில நேரங்களிலே, காய்ச்சலின் காரணமாக அங்கே உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு, அதற்குத் தேவையான உணவு அண்மையிலே, பக்கத்திலே இருக்கின்ற காடுகளில் கிடைக்கின்ற காரணத்தால் அவை வருகின்றன. அதைத் தடுப்பதற்கு எங்களுடைய காவலர்கள், வேட்டைத் தடுப்புக் காவலர்கள் மற்றும் அதிலே ஈடுபட்டிருக்கின்ற மற்ற அலுவலர்கள் எல்லாம் பொது மக்களுக்கும் எச்சரிக்கை விடுக்கிறார்கள். அதுபோன்று வருகின்ற வன விலங்குகளையெல்லாம் மீண்டும் காட்டுக்குள்ளேயே அனுப்புவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். முன்பெல்லாம் அதற்கு சூரிய மின் வேலி அமைப்பதில்லை. அந்த ஆட்சியிலே 5 ஆண்டு காலத்திலே 62 கிலோ மீட்டரிலேதான் இந்த சூரிய மின் வேலி எல்லாம் அமைத்திருந்தார்கள். இதையும் மீறி வரக்கூடாது என்பதற்குத்தான் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே 1,167 கிலோ மீட்டருக்கு சூரிய மின் வேலி அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். (மேஜையைத் தட்டும் ஒலி) இதைப்போல, தேவையான நடவடிக்கைகள் உரிய நேரத்திலே எடுக்கப்படுகின்றன.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 139, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

139—

புறவழிச் சாலை

***30345—திருமதி மு. சந்திரா:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2010 மே 4]

(அ) ராஜபாளையம் தொகுதி, ராஜபாளையம் நகரில் புறவழிச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) தேசிய நெடுஞ்சாலை 208-ல் ராஜபாளையம் நகருக்கு புறவழிச் சாலை அமைப்பதற்கான சாலை நேர்பாடு தொடர்பாக ஆய்வு செய்வதற்கு மைய அரசு ஒப்புதல் அளித்தது. அதன்படி, இத்திட்டம் குறித்த விரிவான திட்ட அறிக்கை மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(ஆ) விரிவான திட்ட அறிக்கைமீது மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்ட பின், அதன் அடிப்படையில் புறவழிச் சாலை அமைப்பதற்கு மைய அரசின் நிதி உதவி பெற்று தக்க நடவடிக்கை எடுப்பது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா.*

திருமதி மு. சந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் நகரப் பகுதியில் மக்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாலும், தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாக இருப்பதாலும், சரக்கு ஏற்றிச் செல்லும் வாகனங்களும், தொழில் நிறுவனங்களின் பேருந்துகளும், பள்ளி வாகனங்களும், ஆட்டோக்களும், வாடகை வாகனங்களும் நகர மையப் பகுதியில் வந்து செல்வதாலும், பொது மக்கள் பயணம் செய்யும் பேருந்துகளுக்கு போக்குவரத்து நெரிசல் காரணமாக அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. எனவே, ராஜபாளையம் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான புறவழிச் சாலையை விரைவில் அமைத்துத் தரும்படி இந்த அரசை வேண்டிக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கருத்துகள் எல்லாம் முழுவதும் அரசால் ஏற்றுக்கொள்ளகூடியதுதான். அது ஒரு முக்கியச் சாலை. அதாவது, தேசிய நெடுஞ்சாலையில் ஒன்று; அதுவும் குறிப்பாக, மத்திய அரசின் தேசிய நெடுஞ்சாலை அமைச்சகத்தின் நிதியைப் பெற்று, மாநில அரசால் பராமரிக்கப்படக்கூடிய சாலை. இந்தச் சாலை கொல்லத்திலே தொடங்கி செங்கோட்டை, தென்காசி, ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர் வழியாக திருமங்கலம் வரை இணைக்கக்கூடிய சாலையாகும். இதனுடைய நீளம் ஏறத்தாழ 231 கிலோ மீட்டர். அதிலே முக்கியச் சாலையாக இருக்கின்ற காரணத்தால், குறிப்பாகத் தென்பகுதிக்கு, மதுரை பகுதியிலிருந்து செல்வதற்கு முக்கியமான சாலை. எனவே, அதில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தால்தான், மாநில அரசு ராஜபாளையத்திற்கும், ஸ்ரீவில்லிபுத்தூருக்கும் புறவழிச் சாலை அமைக்கவேண்டுமென்று சொல்லி கருத்துரு அனுப்பப்பட்டது. அதுவும் குறிப்பாக, இரண்டிற்கும் சேர்த்து, ஏறத்தாழ சுமார் 26 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஒரே புறவழிச் சாலையாக அமைக்கப்படும். அடிக்கடி அந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் எங்களிடத்திலே இது குறித்து பல முறை வலியுறுத்தியிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலும் அந்தக் கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, அதற்குரிய அனுமதி மத்திய அரசிலிருந்து கிடைக்கும்பட்சத்தில், விரைவாக அந்தப் புறவழிச் சாலை அமைப்பதற்கு அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா.

திருமதி மு. சந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது மக்களின் நலன் கருதி விரைவில் செய்து தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

திரு. எம். பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியில் புறவழிச் சாலை முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டு, முழுமையான பணி முடிவடைந்திருக்கிறது.

2010 மே 4]

இருந்தாலும், சீர்காழி பகுதியிலே இருக்கக்கூடிய பனமங்கலம் என்ற பகுதியில், இரயில்வே தண்டவாளத்திற்கு மேலே இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணியை மிகவும் தாமதமாக, மெதுவாகச் செய்து வருகின்றார்கள். எனவே, அந்தப் பணியை விரைவுபடுத்த நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 11 மாவட்டங்கள் தொடர்புடைய திட்டம் அது. மாநில அரசுக்கு உலக வங்கி நிதியுதவி தந்ததன் அடிப்படையில், வேலூர் மாவட்டம் ஆற்காட்டில் தொடங்கி, தூத்துக்குடி வரை கிழக்குக் கடற்கரைச் சாலையை மேம்படுத்தும் வகையிலும், ஆற்காட்டிலிருந்து ஆரணி போன்ற பகுதி, திருவண்ணாமலை போன்ற பகுதிகளிலும், விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வழியாக அந்தச் சாலை, பெரம்பலூர் மாவட்டம் வழியாகத் தஞ்சை மாவட்டம் வந்தடைந்து, அதற்குப் பிறகு நாகப்பட்டினத்தில் தொடங்கி கிழக்குக் கடற்கரையை ஒட்டியுள்ள சாலையினுடைய திட்டத்தோடு இணைக்கப்பட்ட புறவழிச் சாலை. அதிலே இந்தச் சாலையில் நேர்பாடு வராத நகரங்களான சீர்காழி மற்றும் சிதம்பரத்திற்கு இரு புறவழிச் சாலைகளுக்கும் உலக வங்கியின் அனுமதியோடு, மாநில அரசின் நிதியோடு அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பணி அரசின் கவனத்திற்கு அடிக்கடி வந்து, சாலைப் பணி விரைவாக முடிக்கப்பட்டுவிட்டது. அதிலே வரக்கூடிய, அந்த உலக வங்கி திட்டத்திலே வரக்கூடிய 11 இரயில்வே கடவுகளில் மேம்பாலங்கள் அமைக்கப்பட வேண்டும். அந்தப் பணியைத்தான் மத்திய அரசின் இரயில்வே துறையின் இணைத் துறையாக இருக்கக்கூடிய IRCON என்கின்ற கம்பெனியின் மூலமாக அந்தப் பாலம் கட்டப்பட்டு வருகிறது. அதிலே காலதாமதம் ஆனது உண்மை. அந்த சுணக்கத்தைப் போக்குவதற்கு இரயில்வே துறையோடு கலந்து பேசி, அதை வேகப்படுத்தியிருக்கிறோம். அந்தப் பணியை விரைவாக முடித்து சீர்காழி புறவழிச் சாலையையும், சிதம்பரம் புறவழிச் சாலையையும் மக்களின் பயன்பாட்டிற்கு விரைவாகக் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

[2010 மே 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன். (குறுக்கிடுகள்)

திரு. கு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாநகருக்கு அருகில் அமைந்துள்ள ஸ்ரீபுரம் பொற்கோயிலுக்கு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருமிக்கொண்டு நேரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். கேள்வியை சீக்கிரம் கேளுங்கள்.

திரு. கு. பாண்டுரங்கன்: தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்களும், நூற்றுக்கணக்கான வாகனங்களும் வருவதால், போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்காக நடப்பு நிதியாண்டிலேயே நெல்வாய்-கந்தநேரி சாலையை நான்கு வழிப் பாதையாகத் தரம் உயர்த்துவதற்கு மத்திய அரசுக்கு மாநில அரசின் சார்பில் கருத்துரு அனுப்பி வைக்கப்படுமா என்பதையும் கேட்டு, மேலும், பொற்கோயிலுக்கு அருகில் உள்ள சாலைகளை ஒருங்கிணைத்து புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-25*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பு நம்முடைய வேலூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், வேலூர் நகருக்குப் புறவழிச் சாலை வேண்டுமென்று சொன்னார். அதிலேயும் நான் விளக்கமான பதிலைத் தந்திருக்கிறேன். வேலூர் நகரத்திலும், அதனைச் சுற்றியுள்ள பகுதியிலும் இருக்கக்கூடிய போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்குத் தொடர்ந்து மத்திய அரசினுடைய நிதியைப் பெறுவதற்கும், அதே நேரத்திலே, மாநில அரசு மூலமாக என்ன பணிகளைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்வதற்கும் நிச்சயமாக அரசு பரிசீலித்து, அதற்குரிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எல். இளவழகன்.

திரு. கே.எல். இளவழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்

2010 மே 4]

வேலூர் மாவட்டத்திற்கு வருகை தந்தபோது, ஆற்காடு-தூத்துக்குடி சாலைப் பணியை வேகப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தேன். அந்தச் சமயத்திலே, ஆய்வை முடித்துவிட்டு அந்தப் பணிகளை நேரடியாக ஆய்வு செய்து, அந்தச் சாலைப் பணி துரிதமாக முடிக்கப்பட்டு, மக்களுடைய பயன்பாட்டிற்கு விடப்பட்டிருக்கின்றது. அதற்காக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். அடுத்து, ஆற்காடு-தூத்துக்குடி சாலை என்பது ஆற்காட்டினுடைய மையப் பகுதியில் வந்து முடிவடைகிறது. அப்படி மையப் பகுதியில் முடிவடைகிற காரணத்தால் போக்குவரத்து நெரிசல் மிக அதிகமாக ஏற்படுகிறது. ஆற்காடு நகரத்தைக் கடந்து செல்வதற்கே கிட்டத்தட்ட அரை மணி நேரம் ஆகிறது. எனவே, இந்தச் சாலைக்குப் புறவழிச் சாலையை அமைத்துத் தருவாரா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு முதல் தூத்துக்குடி வரை எடுக்கப்பட்ட சாலை 11 மாவட்டங்கள் தொடர்புடைய சாலை. உலக வங்கி நிதியுதவியோடு செயல்படுத்தப்படும் அந்தத் திட்டத்தில் 13 புறவழிச் சாலைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே ஆற்காடு நகரத்திற்குப் புறவழிச் சாலை அமைப்பது விடுபட்டுவிட்டது. அது நியாயமான கோரிக்கை. எனவே, அது குறித்துத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், அந்த மாவட்டத்தைச் சார்ந்த நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் எங்களுடைய கவனத்திற்கு ஆய்வுக் கூட்டத்திலே கொண்டு வந்ததார்கள். அதற்குப் பிறகு உலக வங்கியைத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும், அந்தப் புறவழிச் சாலையை அமைப்பதற்கு அரசு அதற்காக என்ன செய்ய முடியுமோ, அதைத் தொடர்ந்து செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்குப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்.

[2010 மே 4

திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரினுடைய போக்குவரத்து நெரிசலைத் தீர்ப்பதற்காக மதுரை நகருக்கு வெளியே வெளிவட்டச் சாலை ஒன்று நான்கு புறங்களும் இணைக்கின்ற வகையிலே அமைக்கப்பட்டது. ஆனால் மூன்று புறங்களில்தான் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. உத்தங்குடியிலிருந்து சமயநல்லூர் வரை அந்த இணைப்புச் சாலை இன்னும் அமைக்கப்படவில்லை. அந்தச் சாலையை அமைத்தால்தான் அந்தப் புறவழிச் சாலை முழுமை அடையும் என்பதை அரசுக்குத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் புறவழிச் சாலை முழுமையடைவதற்கு எப்போது அறிவிப்பார் என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக தேசிய நெடுஞ்சாலை எண் 7-இல்தான் அந்தப் புறவழிச் சாலை அமைப்பதற்குரிய திட்டம், மத்திய அரசின் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலமாக எடுக்கப்பட்டது. இடையிலே கட்டுமானப் பொருள்களுடைய விலையேற்றம் போன்ற பிரச்சினைகள் காரணமாக, ஒப்பந்ததாரருக்கும், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதற்குப் பிறகு, கருத்து வேறுபாட்டிற்குத் தீர்வு காணப்பட்டு, பணிகள் சில இடங்களிலே வேகமாக நடைபெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற அந்தக் குறைபாட்டை சரி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 140, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. மதியரசன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

140—

விடுதி

***113205—திரு. சுப. மதியரசன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—